தினகரன்
Dinakaran
ஜூலை 27, 2018
दिनकरन

# 2 இந்தியர் உள்பட 6 பேருக்கு ரமோன் மகசேசே விருது

மணிலா, ஜூலை 27: பரத் வத்வானி, சோனம் வாங்குக் ஆகிய 2 இந்தியர்கள் உள்பட 6 பேருக்கு ரமோன் மகசேசே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



▶ பரத்வானி, சோனம் வாங்குக்

ஆசியாவின் நோபல் பரிசு என அழைக்கப்படும் ரமோன் மகசேசே விருது பிலிப்பைன்சின் ரமோன் மகசேசே அறக்கட்டளை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது, இந்தியாவைச்சேர்ந்த பரத் வானி, சோனம் வாங்குக் ஆகிய 2 பேருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விழா அடுத்த மாதம் 31ம் தேதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள கலாச்சார மையத்தில் நடைபெறும். இது தொடர்பாக ரமோன் மகசேசே விருது அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியாவை சேர்ந்த வாங்குக் (51) வட இந்தியாவில் பின்தங்கிய கிராமப்புற பகுதிகளில் கல்வியில் சீர்திருத்தத்தை புகுத்தியவர். லடாக் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கி தந்துள்ளார். சிறுபான்மையினத்தவரை உயர்த்திய இவரது சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்படுகிறது.

மற்றொரு இந்தியரான வத்வானி, மனநோயால் பாதிக்கப்பட்டு சாலைகளில் திரிபவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு மருத்துவம் பார்த்து வருகிறார். பல்வேறு இடையூறுகளுக்கு இடையிலும் அவர் துணிவுடன் இப்பணியை செய்து வருவதை பாராட்டி மகசேசே விருது வழங்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.